# நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் கதையமைப்பு

**அருள் எஸ்**

*உதவிப்பேராசிரியர், ஆயர் ஆஞ்ஞிசுவாமி கல்வியியல் கல்லூரி, முட்டம், தமிழ்நாடு, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் உலக நாட்டுப்புற இலக்கியங்களுள் முதன்மையானதாக உள்ளன. உலக கதைப்பாடல்கள் அனைத்தும் அமைப்பு முறைகளில் ஒற்றுமைக் கூறுகளை தன்னகத்தே பெற்றதாக விளங்குகின்றன. இத்தகைய அமைப்பு முறைகளில் முதன்மையனதாக விளங்குவது கதையமைப்பு முறையாகும். ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் நிலவிவந்தாலும் அவை ஒத்தச்சூழலைக் கொண்டதாக காணப்படுகின்றன. தேவதைகளைக் குறித்த கதைப்பாடல்கள், நாட்டுப்புற தெய்வங்களைப் பற்றியக் கதைப்பாடல்கள், வீரதீரச் செயல்களைப்புரிந்த வீரர்களைப்பற்றியக் கதைப்பாடல்கள், மன்னர்களைப் பற்றிய கதைப்பாடல்கள் என பல்வேறு நாடுகளில் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் வழங்கிவரினும் அவை கதையமைப்பு முறைகளில் பல ஒற்றுமைகளைக் கொண்டதாக விளங்குகின்றன. இத்தகைய கதையமைப்பு முறையை இக்கட்டுரை விவரிக்கிறது.*

***முக்கிய வார்த்தைகள்:*** *நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், கதையமைப்பு, மரபுகள், பண்பாட்டுக் கூறுகள்.*

**முன்னுரை**

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள், மரபுகள், பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டதாக விளங்குபவை நாட்டுப்புற இலக்கியங் களாகும். இவ்இலக்கியங்கள் வாய்மொழியாக வழங்கி வரப்பட்டவையாகும். இவற்றில் மிக முக்கியமான நாட்டுப்புற இலக்கியமாக விளங்குபவை நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் ஆகும். நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலையும், சமூக சூழ்நிலைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் அடையாளம் காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது. பாலட்(Ballad) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக தமிழில் கதைப் பாடல் என்று கூறுகின்றனர். தமிழில் கதைப்பாடல் என்ற சொல்லானது வில்லுப்பாடல்கள், உடுக்கடிப் பாடல்கள் போன்ற நாட்டார் வழக்காற்று வகைமைகளை குறிப்பிடுவதாக உள்ளது. தமிழில் நாட்டார் கதைப்பாடல்கள் அனைத்தும் வாய் மொழியாக வழங்கி வந்தவை ஆகும். பொதுவாக உலக மொழிகளில் தோன்றம் கொண்ட அனைத்து நாட்டார் கதைப்பாடல்களும் வாய்மொழியாக வழங்கப்பட்டு வந்தவையாகும். தமிழ் நாட்டார் கதைப்பாடல்கள், வீரதீரச் செயல்களைப் புரிந்தவர்களின் கதைகள், ஒரு வரலாற்று நிகழ்வு, போர்கள், உயர்ந்த சாதிக்காரன் தாழ்ந்த சாதிப்பெண்ணை மணம்புரிய எண்ணியபோது நிகழ்ந்த தகராறுகள், அதுபோன்றே தாழ்ந்த சாதிக்காரன் நிலவுடமைப் பெண்ணை காதலித்த போது நடந்தப் பிரச்சனைகள், சொத்துத் தகராறில் நிகழ்ந்த கொலைக்குப் பழிக்குப் பழி வாங்குவதாக அமைந்த கதைப்பாடல்கள், தெய்வங்கள், தேவதைகள், அரசர்கள், பூதங்கள், புராண இதிகாச நிகழ்வுகள் போன்ற பல்வேறு கதையமைப்பு முறைகளைக் கொண்டதாக விளங்குகின்றன. இத்தகைய கதையமைப்பு முறைகள் உலக நாட்டார் கதைப்பாடல்களோடு ஒத்து போகுமாறு உள்ளதாக நாட்டுபுற ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர். நாட்டுப்புறக் கதைப்பாடல்களை ஆராயும்போது அவை ஏதேனும் ஒருவகையில் கதையமைப்புக் கூறுகளைக் கொண்டதாக விளங்குகிறன. இத்தகைய கதையமைப்பு முறைகளை இக்கட்டுரையில் காண்போம்.

### ஆய்வின் நோக்கங்கள்

- கதைப்பாடல்களின் பண்புகளை அறிதல்.
- கதைப்பாடல்களின் கருத்துருவாக்கங்களை அறிதல்.
- வரலாற்று கதைப்பாடல்களின் கதையமைப்பு முறைகளை அறிதல்.
- வில்லுப்பாடல்களையும் அதன் கதையமைப்பினையும் அறிதல்.
- வீரகாவிய கதைப்பாடல்களை அறிதல் ஆகியவை இக்கட்டுரையின் முக்கிய நோக்கங்களாகும்.

### கதைப்பாடல்களின் பண்புகள்

கதைப்பாடல்கள் பல்வேறு சிறப்புக் கூறுகளையும் பண்புகளையும் கொண்டதாகும். நாட்டார் கதைப் பாடல்கள் இடச்சூழலாலும் காலச்சூழலாலும் மாறு பாட்டிற்குரியவை ஆகும். எனினும் இவை பலப் பொதுப் பண்புகளோடு திகழ்கின்றன. நாட்டுப்புற ஆய்வாளர்கள் பலரும் கதைப்பாடல்களைக் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டபோதும் அதனைப் பற்றிய தெளிவான விளக்கங்களையோ வரையறை களையோ கொடுக்கவில்லை. கதைப்பாடலுக்கு கலைக்களஞ்சியம் பின்வருமாறு விளக்கம் தருகிறது. ‘‘கதைப்பாட்டு என்ற இலக்கிய வகையானது மக்களது நாவில் திகழ்கிறது. இதை இயற்றியவர் யாராகயிருப்பினும் பாடுபவரது உரிமையாக மாறிவிடுகிறது. இதற்கு முன்னுரையும் பின்னுரையும் விளக்கமும் தேவையில்லை.’’ (“கலைக்களஞ்சியம்” 186-187) என்ற விளக்கத்தைப் பார்க்கும்போது கதைப் பாடல்களுக்கு மரபுக்கு உட்பட்டதான இலக்கண வரையறைகளை கொடுக்க இயலாது என்பது புலனாகிறது.

“கதைப்பாடல்கள் வரலாறுகள் அல்ல அவை வீர காவியம் மனிதப்பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவற்றை கற்பனையால் உருவான நாட்டார் பாடல் என்றே கொள்ளவேண்டும். (வானமாமலை 1974, 21) என்று குறிப்பிடுகின்றார். இதனை நோக்கும்போது வீரதீரச் செயல்களைப் புரிந்தோரின் சிறப்புக்களையும், புகழையும் பெருமைப்படுத்தும் விதமாகவும் அவர்களின் வீரத்தை என்றும் மறக்காமல் நன்றி பாராட்டும் விதமாகவும் கற்பனைக் கலந்த புனைவுகளால் மெருகேற்றப்பட்டு கதைப்பாடல் வடிவம் பெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது.

குறிப்பிட்டதொரு பண்பாட்டில் குறிப்பட்ட சில சூழல்களில் வாய்மொழியாக ஒரு பாடகனோ அல்லது ஒரு குழுவினரோ சேர்ந்து மக்கள் முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்துகின்ற கதை தழுவியப்பாடலே கதைப்பாடலாகும் என தன் ஆய்வு வாயிலாக கதைப்பாடலுக்கு விளக்கம் தருகிறார் இராமச்சந்திரன் நாயர். இவ்வாறு கதைப்பாடல்கள் குறித்த பல ஆய்வாளர்களும் பல விளக்கங்களைத் தருகின்றனர். ஆனால் இவ் விளக்கங்களையும், வரையறையும் முடிந்த ஒன்றாக கருதமுடியாது.

### தமிழில் கதைப்பாடல்கள்

தமிழில் நாட்டார் வழக்காறுகளில் கதைப்பாடலுக்கு எனத் தனி இடமுண்டு. தமிழில் நாட்டார் கதைப் பாடல்கள் அம்மானை என்ற வடிவில் முதல் முதலில் வழங்கப்பட்டு வந்துள்ளது. அம்மானை என்பது பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டாகும். இவ்விளையாட்டைப் பெண்கள் விளையாடும்போது; ஏதேனும் ஒரு கதையை ஒரு பெண் வினாவாகத் தொடங்க அதன் விடையை மற்ற பெண்கள் தொடர்ந்து கூற விளையாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டின்போது பல புராண இதிகாசக் கதைகளைப் பாடல்கள் வாயிலாகப் பெண்கள் வெளிப்படுத்தி அம்மானை விளையாடுவார்கள். இவ்வாறு தமிழில் கதைப் பாடல்களுக்கு முதலில் வடிவம் தந்தவை அம்மானையாகும். இச்சொல்லிலிருந்து அம்மானை வரி, அம்மானைக் கால், அம்மானை மடக்கு என்ற சொற்கள் பிறந்தன. அம்மானை என்ற சொல்லிற்கு தாய், தலைவி, ஆடுங்கருவி, தீ என்ற பொருள்கள் உண்டு. அம்மானைப்பாட்டு என்பது கதைப்

பாடலைக் குறிப்பதாகும். சிலப்பதிகாரம், திருவாசகப் பாடல்களில் அம்மானை வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. பிள்ளைத்தமிழில் அம்மானைப் பருவம் பாடி ஆடும் நிலையில் இல்லாமல் இலக்கிய நிலையில் உள்ளது. பிள்ளைத்தமிழில் பெண்பால் பிள்ளைத்தமிழில் ஒன்பதாவது பருவம் அம்மானை யாகும். இவ்வாறு தமிழில் அம்மானை என்று கூறப்பெறும் கதைப்பாடல் வடிவம் மிகப்பழமை வாய்ந்ததாகும்.

தமிழில் கதைப்பாடல்களுக்குப் பல்வேறு பெயர்கள் அதன் தன்மையை விளக்குவனவாக உள்ளன. கதைப்பாடலின் வகைப்பாட்டினைப் சு.சத்திவேல் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

| | | |
|---|---|---|
| கதை | : | முத்துப்பட்டன் கதை, நல்லதங்காள் கதை, அண்ணன்மார் சுவாமி கதை |
| கதைப்பாடல் | : | காத்தவராயன் கதைப்பாடல், வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல் |
| அம்மானை | : | இராமையப்பன் அம்மானை, கள்ளழகர் அம்மானை |
| பாட்டு | : | காமன் பாட்டு |
| மாலை | : | பவளக்கொடி மாலை, அல்லியரசாணி மாலை |
| வெற்றி | : | திவான் வெற்றி |
| எற்றம் | : | ஏணி ஏற்றம் |
| கும்மி | : | அரிச்சந்திரன் கும்மி, சிவகெங்கைக் கும்மி |
| குறவஞ்சி | : | ஞானரத்னக் குறவஞ்சி |
| காவியம் | : | கபிலை காவியம் |
| வானவாசம் | : | பஞ்சபாண்டவர் வனவாசம் |
| சோபனம் | : | லலிதாம்பாள் சோபனம் |
| மசக்கை | : | பொன்னுருவி மசக்கை |
| உபாக்கியானம் | : | வத்சல உபாக்கியானம் |
| சரிதம் | : | ஆதியூர் சரிதம், மன்மதன் சரிதம் |
| விருத்தம் | : | கட்டபொம்மு இராமநாதபுர போட்டி |
| பூசை | : | மார்க்கண்டன் திருக்கடவூர் பூசை |
| வாக்கியம் | : | கபோத வாக்கியம், குசலபி வாக்கியம் |
| கீர்த்தனை | : | கபில சரித்திரக் கீர்த்தனை |
| சண்டை | : | கான்சாகிபு சண்டை |
| போர் | : | இரவிகுட்டிப் பிள்ளைப் போர் |
| படைப்போர் | : | கன்னடியன் படைப்போர் |
| யாகம் | : | அசுவமேத யாகம் |
| குறம் | : | துரோபதை குறம். |
| சிந்து | : | பூலுத்தேவன் சிந்து |
| தூது | : | புலந்திரன் தூது |
| வில்லுப்பாட்டு | : | சுடலைமாடன் கதை வில்லுப்பாடல் (சக்திவேல் 92-93) |

இவை போன்ற கதைப்பாடல் வடிவங்கள் தமிழில் வழங்கப்பட்டு வந்துள்ளன. இக்கதைப்பாடல்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த வீரதீரச் செயல்கள் புரிந்தவர்களைப் பற்றியதாகவோ, புராண இதிகாசநிகழ்வுகளை மையமாகக் கொண்டதாகவோ உள்ளன. இவை பல்வேறு கதை யமைப்புகளைக் கொண்டதாக காணப்படுகின்றன.

கதைப்பாடல் வடிவங்கள் நாட்டுபுற மக்களிடம் மிக பிரசித்திப் பெற்றதாக விளங்கியவையாகும். இவை நாட்டார் வழக்காற்றியலில் தனக்கென தனிமுத்திரை பதித்தவையாகும். தமிழ் நாட்டுப்புறக் கதைப்பாடல் வடிவங்களில் போர் தோன்றக் காரணம், போர் நடவடிக்ககைகள் குறித்த கதைப்பாடல் வகைகளும் காணப்படுகின்றன. இத்தகைய கதைப்பாடல்கள் குறிப்பிட்ட அமைப்பு முறைகளை பின்பற்றி இயற்றப்பட்டதாக உள்ளன. இவ்வமைப்பு முறையாவது: 1. காப்பு 2. வணக்கம் 3. வரலாறு 4. வாழி என்ற பகுதிகளைக் கொண்டதாகும். இதனை நோக்கும்போது முதலில்

இறைவனை வாழ்த்திபாடி கதைப்பாடல்களைத் தொடங்க வேண்டும் என்பது ஒரு மரபாக பின் பற்றப்பட்டு வந்துள்ளது புலப்படுகிறது. அடுத்ததாக தமிழ்கள் குருவை வணங்கும் மாண்பு பெற்றவா்கள் இத்தகைய மாண்பு நாட்டுப்புற மக்களிடம் காணப் பட்டன என்பதை அவா்கள் கதைப்பாடல்களில் குருவணக்க முறைகளை அமைத்திருந்தன்மூலம் அறிய முடிகிறது.

## கதைப்பாடல்களில் மையக்கருத்துக்கள்

ஒரு கதையை வாய்மொழி வாய்பாட்டு நடையில் பரம்பரையாகச் சொல்லி வரும்போது பயன்படுத்தப் படும் கருத்துக்களின் தொகுதிகளை அடிக் கருத்துக்கள் என்கிறாா் ஆல்பா்ட் லாா்டு அவா்கள் (ஆல்பா்ட்லாா்டு. 68). மரபுவழி வாய்மொழிப்பாடல்கள் எடுத்துரைப்பதற்காக மீண்டும் மீண்டும் வரும் ஒரு கூறு அல்லது வருணனை அடிக்கருத்தாகும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வாயப்பாடு என்பது எடுத்துரைப்பதற்காகவும் வருணிப்பதற்காகவும் வரும் கூறு என்றாலும் யாப்பியல் முறையில் கட்டுப்படுத்தப்பட்டது. அடிக்கருத்துக்களில் அளவில் மட்டுமின்றி அவற்றின் வாய்பாட்டு உள்ளடக்கத்திலும் மாறுபடுகின்றன. எனவே அடிக்கருத்து என்பது செறிவின்றி மீண்டும் மிண்டும் வரக்கூடியது எனலாம்.

தமிழ்க் கதைப்பாடல்களில் காணப்படும் அடிக் கருத்துக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. முப்பத்திரண்டு சமூகக்கதைப் பாடல்களின் அடிப்படையில் நா.வனமாமலை மையக்கருத்துக் களைத் தொகுத்து வழங்கியுள்ளாா். ஆவை பின்வருமாறு:

1. காப்பு 2. நாட்டு வளம் 3. குழந்தை இல்லாமை 4. குறத்தி குறிசொல்லல் 5. தவம் செய்தல் 6. கருவுறுதல் 7. பிள்ளை பிறத்தல் 8. சோதிடன் குறிசொல்லல் 9. பள்ளியில் படித்தல் 10. அண்ணன் மாரைப் பிரிந்து செல்லல் 11. அரசனிடம் பணி யாற்றல் 12. அரசன் பரிசளித்தல் 13. பெண்களைக் கண்டு காதல் 14. உரையாடல் 15. தந்தை ஆயுதமெடுத்தல் 16. மணந்துகொள்ள விருப்பம் தெரிவித்தல் 17. திருமணத்திற்கு நிபந்தனை விதித்தல் 18. பெண்ணை மணப்பதாக உறுதிகூறல் 19. சகோதரா்கள் சிறையிலிடலும் தப்பித்தலும் 20. நிபந்தனையை நிறைவேற்றல் 21. திருமணம் 22. களவுபோதல் 23. கனவு 24. போரிடல் 25. கொடிசுற்றிக் குழந்தை பிறத்தல் 26. காட்டில் விடப்பட்டு நாகப்பாம்பால் பாலூட்டல் 27.சக்கிலியன் வளா்த்தல் 28. அரசன் மகனைக் காதலித்து மணம் முடித்தல் 29. அரசன் போாில் இறத்தல் 30. மற்றொரு மன்னனிடம் பணியாற்றல் 31. கள்ளரை அடக்க மதுரை செல்லல் 32. அரண் மனைப் பெண்ணைத் தூக்கிச் செல்லும்போது மாறுகால் மாறுகை வாங்கப்படல் 33. சேபிளையான் வளா்த்தல் 34. ஆாிய மாலையைச் சிறை எடுத்தல் 35. மன்னனிடம் முறையிடல் 36. இறந்த பெண்ணை உயிா்பெறச் செய்தல் 37. உயா்சாதி வீட்டில் தங்க எதிா்ப்பு 38. காதலனும் காதலியும் சந்தித்தல் 39. ஊரைவிட்டுப் புறப்படல் 40. அண்ணன்மாா் தேடல் 41. காட்டிக் கொடுத்தல் 42. பெண்ணை விரும்பல் 43. பெண்ணின் தந்தை மறுத்தல் 44. கொடைநாளில் திருமணம் செய்தல் 45. சுடலைக்கு நோ்ந்த பன்றியைக் கொல்லல் 46. மச்சினன் சகோதாி கணவனைக் கொல்லல் 47. இரண்டு ஆண் குழந்தைகள் பிறத்தல் 48. தந்தை வரலாறு அறிதல் 49. தாய்மாமனைக் கொன்று அவனது மகனை மணம் முடித்தல் 50. திருடா்களை விரட்டியடித்தல் 51. மக்கள் புகழ்ந்து பரிசு வழங்கல் 52. குலப் பெருமை அறிதல் 53. பகைவனுடன் மோதல் 54. மற்ற அரசனின் உதவியைப் பெற 55. சூழ்ச்சியால் கொல்லப்படல் 56. தீச்சகுனங்கள் 57. சுனையாடும் போது வழிதவறல் 58. கருவூலத்தை எடுக்கத் திருடா்களால் கொல்லப்படல் 59. கொடிய விலங்கு களால் திருடா்கள் அழித்தல் 60. உறவினா்கள் மாள்தல் 61. வேட்டையாடல் 62. திருடல் 63. பிடிபடல் 64. மந்திரவாதி வீட்டில் தங்கல்

65. மாட்டிறைச்சி விரும்பல் 66. கள்ளனைக் கண்டு பிடித்துக் கொலை செய்யல் 67. நாக்கைப் பிடுங்கிச் சாதல் 68. குதிரையடக்கி மந்திரியாதல் 69. பெண் ணுடன் தொடர்பு 70. தம்பிக்குத் தன் மனைவியுடன் தொடர்பு இருக்குமென ஐயப்பட்டு சுடல் 71. அண்ணி கொழுந்தனுடன் உடன்கட்டை ஏறல் 72. கணிகையர் தொடர்பு 73. மந்திரத்தால் பலர் இறத்தல் 74. கற்பழிப்பு 75. திருமணம் பேச்சு மறுப்பு 76. பஞ்சம் 77. அண்ணன் வீடுவரல் 78. அண்ணி கொடுமை 79. ஏழு குழந்தைகளைக் கிணற்றில் வீசித் தானும் இறத்தல் 80. அனாதை 81. வேலை இல்லை 82. தடி எடுத்தல் தண்டல் காரனாதல் 83. பெருஞ் செல்வந்தனாகி மந்திரியாதல் 84. வழிப்பறி செய்து ஏழைகளுக்கு அளித்தல் 85. குற்றமிழைத்தல் 86. காவலர் தேடல் 87. தலைமறைவு வாழ்க்கை 88. காட்டிக் கொடுத்தல் 89. தண்டனை பெறல் 90. புதையல் எடுத்தல் 91. கோயில் பூசை 92. மகனைத் திரும்பித் தரத் தெய்வம் மறுத்தல் 93. தலைவன் கொல்லப்படுதல் 94. தலைவி கொல்லப்படுதல் 95. புதையலுக்காகக் கொல்லப்படல் 96. கழுவி லேற்றம் 97. நாய் சாவைத் தெரியப்படுத்தல் 98. உடன்கட்டை ஏறல் 99. தீகுளித்தல் 100. நாக்கைப் படுங்கிச்சாதல் 101. வன்னி மரமாதல் 102. உயிர் பெற்று எழல் 103. வரம் பெற்றுப்பழி வாங்கல் 104. தெய்வமாதல் 105. வழிபடுதல் 106. வாழ்த்து. (வனமாமலை 1971, 115-116) தமிழில் வழங்கப்படும் கதைப்பாடல்கள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்திய நா.வனமாமலை அவர்கள் அவற்றின் மையக்கருத்துக்களின் அடிப்படையில் தொகுத்து அளித்திருப்பது நாட்டுப்புறக் கதைப்பாடல் ஆய்வுகளுக்கு மிக பயனுள்ள வகையில் அமைந்திருப்பதோடு, தனி இடத்தையும் பெற்றுத் தந்துள்ளன.

## வரலாற்றுக் கதைப்பாடல்களில் கதையமைப்புமுறைகள்

12 ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகத்தின் சில பகுதிகளை ஆட்சி செய்த குறுநில மன்னர்களும், அவர்தம் தளபதிகளும் நடத்திய போர்களைப் பற்றிய கதையாடல் பாட்டுக்களையே வரலாற்றுக் கதைப்பாடல்கள் என்று குறிப்பிட்டு வருகிறோம். இது குறித்த வரையறைப்பற்றி இன்னும் நாம் கவலைப்படவில்லை. இக்கதைப்பாடல்களில் கூறப்படும் செய்திகள் 13 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவை.

ஐவர் ராசாக்கள் கதை, கன்னடியன் படைப்போர், பஞ்சபாண்டவர்கதை, வெட்டும் பெருமாள் கதை, உலகமுழுதுடையாள் கதை ஆகிய ஐந்து வரலாற்றுக் கதைப்பாடல்களும் ஒரே வரலாற்றைச் சொல்லுவன (வானமாமலை 1974,191). இராமையப்பன் அம்மானை, இரவிக்குட்டி பிள்ளை போர், தம்பிமார் கதை, தேசிங்குராஜன் கதை, கான்சாகிப் சண்டை, சிவகங்கை அம்மானை, சிவகங்கைக் கும்மி, கட்டபொம்மன் வரலாறு, கட்டபொம்மன் கதைப்பாடல், கட்டபொம்மு கூத்து, கட்டபொம்மு கும்மிப்பாடல், அண்ணன்மார் சுவாமிகதை, உலகுடையபெருமாள் கதை போன்றவை வரலாற்றுக் கதைப்பாடல்களாகும்.

## வில்லுப்பாடல்கள்

நாட்டுப்பற மக்களின் வாழ்வியலைச் சித்தரிப்பதில் வில்லுப்பாடல்கள் மிக முக்கிய பங்கு வகிக் கின்றன. வில்லுப்பாடல்கள் நாட்டுப்புற மக்களிடம் விழிப்புணர்வு, நகைச்சுவை உணர்வு, பக்தி, வீரம், மனிதநேயம் ஆகிய பண்புகளை வளர்ப்பதாக விளங்கின. வில்லுப்பாடல்கள் கதைப்பாடல் வடிவத்தில் தனித்துவம் வாய்ந்தவையாகும். வில்லுப்பாடலில் தலைமை ஏற்றுப்பாடுவது ஒருவர் அவர் வில்லை இயக்கியவாறு கதையைத் தொடங்குகிறார். அவருக்கு பின்புலத்தில் மற்றவர்கள் தொடர்ந்து உரையும், பாடலுமாகக் கதையை நகர்த்திச் செல்கிறார்கள். தமிழகத்தில் வழங்கும் வில்லுப்பாடல்களையும் அதன் இயல்புகளையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் லூர்து, வில்லுப்பாடல்கள் நெல்லை, குமரி மாவட்டங்களில் இன்னும் வாழ்ந்துவரும்

வாய்மொழிக் கதையாடல் மரபாகும். இந்த வில்லுப்பாட்டுக் கதையாடல்கள் இம்மரபில் வழிபடப்படும் தெய்வங்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைப்பன. வில்லுப்பாட்டு நிகழ்த்தப்படும் கோவில்களில் அல்லது "பூடங்களில்" (பீடங்களில்) நிலைபெற்றிருக்கும் ஆண், பெண், தெய்வங்கள் இவை. இவற்றைச் சாமிகதை என்பர். இந்தக் கதைப்பாடல்கள் 'பிறந்தகதை". 'இறந்தகதை' என்று வகைப்படுத்தப்படுகின்றன. தெய்வப் பிறவிகளைப் பற்றிய கதைகள் 'பிறந்தகதை' என்றும் வெட்டுப்பட்ட வாதைகளைப் பற்றிய கதைகள் 'இறந்தகதை' என்றும் அழைக்கப்படு கின்றன. வெட்டுப்பட்ட வாதைகளைப் 'பேய்ப் படைகள்', 'படுகளங்கள்' என்றும் நாட்டார் குறிப்பிடுகின்றனர்.

இவ்விருவகை வில்லுப்பாட்டுக் கதையாடல்களும் ஒரே மாதிரியான வரலாற்றுத் தோரணிகளில் அமைகின்றன. ஆனால் அவை வெவ்வேறு பின் புலங்களில் தொடங்குனிறன. முக்கியமான சம்பவங்களை வெவ்வேறு முறைகளில் நடத்திச் செல்கின்றன. இதனால் அவற்றிற்குத் தனித்தன்மை யான பண்பையளிக்கின்றன. முதல் வகைக் கதைகள் (பிறந்தகதை) கைலாசத்தில் தொடங்குகிறன. அங்கு பிறப்பெடுப்பது ஆச்சிரியமாகவும் வலியில்லாமலும் அமையும். அங்கு ஏற்படும் முரண்பாடு இயற்கையிழந்தது. அதனால் பாடலின் இறுதி முடிவதில்லை. ஆனால் இதற்கு மாறாக இரண்டாவது வகைக் கதை (இறந்தகதை) இவ்வுலகில் நம் சமூகத்தில் தொடங்க இங்கு பிறப்பு மானுடநிலையில் வலியுடன் அமைகின்றது. இங்கு முரண்பாடு சமூக அடிப்படை சார்ந்தமைகிறது. ஆதலின் அது துன்பமுடிவாம் சாவுக்கு இட்டுச்செல்கின்றது. முதலாவது புனைவியல் பண்பும், இரண்டாவது நடப்பியல் பண்பும் கொண்டவை.

இவ்விருவகையையும் சார்ந்த வில்லுப்பாட்டுக் கதைகள் ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்டவை இப்பகுதியில் காணப்படுகிறன. சாஸ்தா கதை அல்லது வல்லரக்கன் கதை, சுடலைமாடன் கதை, காத்தவராயன் கதை, மதுரைவீர சுவாமி கதை, இசக்கியம்மன் கதை, மெச்சும் பொருமாள் பாண்டியன் கதை, ஈனமுத்துப் பாண்டியன் கதை, வன்னிராசன் கதை, சின்னணைஞ்சி கதை, பிச்சைக்காரன் கதை, பூச்சியம்மன் வில்லுபாட்டு போன்றவை சில கதைப் பாடல்களாம் (லூர்து, 205-206).

### வீரகாவியக் கதைப்பாடல்

முதலில் வீரகாவியக் கதைப்பாடல்களின் இயல்புகளையும், அவற்றின் இயல்நுட்பங்களையும் குறிப்பிட்டு அவற்றிக்கு இராமையப்பன் அம்மானை எவ்வாறு பொருந்திவருகிறது என்பதனைக் காண்போம். வீரநிலைப்பாடல்களின் பண்புகள் பலவற்றை சி.எம் பௌரா குறிப்பிடுகிறார். கதைக்கும் கதையில் வரும் சம்பவங்களுக்குமே முதன்மையளிக்கும். அதற்கென்று ஒரு நடுநாயக மாக கொள்கை இருந்தால் தன்னுடைய தகுதியை நிருபிக்க மாவீரன் ஒரு சோதனையில் வெற்றிபெற வேண்டும். அச்சோதனை ஏறக்குறைய வலிமைமிகு வீரச்செயலாக இருக்கும். அதற்கு உடல்வலிமையும் பொறுமையும் முயற்சியும் தேவைப்படும். ஏனென்றால் அச்செயற்கரிய செயலைச் செய்ய வாழ்வையே பணயம்வைக்க வேண்டும். ஆனால் தலைவன் எந்த அளவு புகழைத்தேடி வாழ்வைப் பணயம் வைக்கத் தயாராக இருக்கிறான் என்பதைப் பொறுத்தது. இது வாழ்வைப் பணயம்வைக்கும் செயல்களுள் வெளிப்படையானது போரிடுதல் ஆகும். இராமையப்பன் அம்மானையின் இராமையப்பனும், ஒரு மாவீரன் அவனை எதிர்த்துப் போரிடும் வன்னியும், ஒரு மாவீரன் இருவரும் தங்கள் வீரத்தை நிருபிக்க இறுதிவரை போராடுகின்றனர்.

இராமையப்பனும் வன்னியும் தங்கள் வீரதீரப் பண்புகள் குறித்துத் தற்புகழ்ச்சியுடன் சபதம் செய்து வஞ்சினம் கூறுகின்றனர். சாவுக்கு அஞ்சியவர்களாக எவ்விடத்திலும் கதைப்பாடலில் கூறப்படவில்லை. இராமையப்பன்

"தென்னவனே விண்ணப்பஞ்செய்கிறேன் கேளுமய்யா
முன்னமே நஞ்சேனை முடிந்தார் ளென்றுரைத்தீர்
மன்னவர்கள் மெத்த மடிந்தார்க ளென்றுரைத்தீர்
அந்தமறவன் படும் பாடு கேளுமைய்யா
எந்தனிட வாள் திறத்தை யினிப்பாரும் மன்னவனே
தரியோ தனனை சித்திர சேனன் முன்னாள்
பரிவாகத் தேர்க்காலில் பாசமுடன் கட்டுகைபோல்
அரக்கர் குலத்தை அனுமா ரறுத்தாப்போல்
மறக்குலத்தை நானும் மாய்த்துக் கருவறுப்பேன்
எட்டாம லோடி யிறங்கி யிருந்தாலும்
சென்றிரங்கி எட்டாநாள் தென்னவனே பாருலகில்
நாடழித்துத் தீக்கொழுத்திநன்னகரைப் பாழாக்கி
வெட்டிச் சிறைபிடித்து வேந்தன் சடைககனையும்
கட்டிக் கொண்டு வருவேன் காத்தனே யுன்பாதம்"

என்று திருமலை நாயக்கிரிடம் வீரமொழி பேசுகிறான் (லூர்து 212-213).

வீரகாவியக் கதைப்பாடல் போரிடும் பண்புகளையும். வீர தீரச் செயல்களையும் வீரசுவையயையும், மக்களிடம் வழங்கி வந்தவையாகும். வீரமொழியில் பேசும் வீர குணத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்தும் விதமாக வீரகாவியக் கதைப் பாடல்கள் விளங்குகின்றன. இக்கதைப் பாடல்களின் கதையமைப்பு முறைகள் வீரத்தையும், போர் முறையையும் சுவையுடன் எடுத்துரைப்பதாக உள்ளன.

## முடிவுரை

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் நாட்டுப்புற வாய்மொழி வழக்காறுகளில் முதன்மையானதாக விளங்குகின்றன. இவற்றின் கதையமைப்பு முறைகளைப் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. நாட்டுப்புறக் கதைப்பாடல் வடிவங்கள் அடிப்படையில் பிரிக்கப்படபட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுப்புற கதைப்பாடல்களின் மையக்கருத்தக்கள் பலவற்றையும் நா.வானமாலை அவர்கள் தொகுத்துள்ளார்கள். அவரின் அரிய முயற்சி தமிழ் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் குறித்த ஆய்வுக்கு ஒரு தனி இடத்தை அளித்துள்ளது. வராற்றுக் கதைப்பாடல்களில் வரலாற்று முறையினாலான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக கதைப்பாடல்களில் பல்வேறு வராற்றுச் சுவடுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வரலாற்றுக் கதைப்பாடல்கள் குறிப்பாக அரசக் கதைப்பாடல்களை மையமாகக் கொண்டவை யாகும். சில அக்காலத்து பாரம்பரிய வீரத்தையும் குறிப்பிடுகிறது வில்லுப்பாடல்கள் வாயிலாக நிகழ்வுகள் மக்களிடம் எளிதாக கொண்டுச் சேர்க்கப்பட்டன. புராணக்கதைகள், வரலாற்றுக் கதைகள், ஆன்மீகக்கதைகள், வில்லுப்பாடல்களின் கதையமைப்பாக விளங்கின. இவ்வாறு நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் கதையமைப்பு முறைகள் தமிழ் நாட்டுப்புற வரலாற்று ஆய்வுகளின் வாயிலாக வெளிக்கொணரப்பட்டுள்ளன.

## பார்வை நூல்கள்

****************


லூர்து, தே. *நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்.* பாளையங்கோட்டை, எஸ்ஸார் அ.ஃப்செட், சிவகாசி, 1997.

சக்திவேல், சு. (மூன்றாம் பதிப்பு). *நாட்டுப்புற இயல் ஆய்வு.* மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை சென்னை, 2002.

வனமாமலை, நா. *முத்துப்பட்டன்கதை.* மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை, 1971.

வனமாமலை, நா. *மொழியல்லாத நாட்டுப் பண்பாட்டுச் சான்றுகளைப் பொருள் கொள்ளும் முறை.* ஆராய்ச்சி மலர் 4, இதழ் 3, 1974.

"கலைக்களஞ்சியம்". தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை, 1966, பக். 186-187.

லார்ட் ஆல்பர், பி. த. *சிங்கர் ஆம் டெல்ஸ்.* அத்தெனகம், நியூயார்க், 1976.


*****************************************************************************************

## ஆசிரியரைப் பற்றி




*முனைவர் எஸ். அருள் அவர்கள், முட்டம் ஆயர் ஆஞ்ஞிசுவாமி கல்வியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். பல்வேறு கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தேசிய மற்றும் உலக அளவிலான கருத்தரங்கங்களிலும் கலந்துகொண்டு கட்டுரைகளை வழங்கியுள்ளார். பல ஆய்வு இதழ்களிலும் இவருடைய ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. TNTET, NET ஆகிய தகுதித்தேர்வுகளில் தெர்ச்சி பெற்றுள்ளார். கல்வி மற்றும் இலக்கியப் பணிக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார்.*


*****************************************************************************************